Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935



## சோல் தலைமைத்துவப் பண்பு மாநாட்டின் முதல் பதிப்பை தில்லியில் பிப்ரவரி 21-ம் தேதி பிரதமர் தொடங்கி வைக்கிறார்

சென்னை, 20 பிப்ரவரி 2025: புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் பிப்ரவரி 21-ம் தேதி காலை 11 மணியளவில் சோல் முதலாவது தலைமைத்துவ மாநாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கி வைத்து உரையாற்றுகிறார். இம்மாநாட்டில் பூடான் பிரதமர் திரு தாஷோ ஷெரிங் டோப்கே சிறப்பு விருந்தினராகச் சிறப்புரையாற்றுகிறார்.

பிப்ரவரி 21-ம் தேதி முதல் 22-ம் தேதி வரை இரண்டு நாட்கள் நடைபெறும் இந்தத் தலைமைத்துவ மாநாட்டில் அரசியல், விளையாட்டு, கலை, ஊடகம், ஆன்மீக உலகம், பொதுக் கொள்கை, வர்த்தகம், சமூகநலன் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த தலைவர்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். தலைமைத்துவம் தொடர்பான அம்சங்கள் குறித்து விவாதிக்கவும் இது ஒரு முதன்மையான தளமாக அமையும். இந்த மாநாட்டின் கருப்பொருள்களான ஒத்துழைப்பு, தலைமைத்துவ சிந்தனை, வெற்றி, தோல்வி ஆகிய இரண்டிலிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டிய அம்சங்கள் ஆகியவை இளம் பார்வையாளர்களை ஊக்குவிக்கும்.

தலைமைத்துவ பயிற்சி பள்ளி என்பது குஜராத் மாநிலத்தில் அமையவுள்ள தலைமைத்துவ பண்பை வளர்ப்பதற்கான நிறுவனமாகும். பொது நலனை மேம்படுத்துவதற்கு இந்த தலைமைத்துவ பண்பு உதவுகிறது. முறையான பயிற்சி வழங்குவதன் மூலம் இந்தியாவில் அரசியல் தலைவர்களின் சிந்தனையை விரிவடையச் செய்வதும், தகுதி, அர்ப்பணிப்பு, பொதுச் சேவைக்கான ஆர்வம் ஆகியவற்றின் மூலம் உயர்ந்த பண்புகளைச வளர்க்க உதவுவதே இதன் நோக்கமாகும். இன்றைய உலகில் தலைமைத்துவத்தின் சிக்கலான சவால்களை எதிர்கொள்ள தேவையான நுண்ணறிவுகள், திறன்கள் மற்றும் நிபுணத்துவத்தை மேம்படுத்த இந்த பயிற்சி நிறுவனம் வகை செய்கிறது.

## ஐஐசிஏ- நிறுவனத்தில் கட்டுமான தொழிலுக்கான திட்டங்களை மறுசீரமைப்பது குறித்த மாநாடு

சென்னை, 20 பிப்ரவரி 2025: இந்திய பெருநிறுவனங்கள் விவகார கல்வி நிறுவனத்தின் முதுநிலை திவால் நடைமுறை பிரிவு மானேசரில் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த மாநாட்டில் நாடு முழுவதிலுமிருந்து திவால் நடைமுறைச் சட்டத்துறையைச் சேர்ந்த நிபுணர்கள், சட்ட வல்லுநர்கள், சொத்து மறுசீரமைப்பு நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் ஆகியோர் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் திரு அனுஜ் ஜெயின், திரு பல்லவ் மொஹாபத்ரா, திரு ஹரி ஹரா மிஸ்ரா, மற்றும் இந்திய பெருநிறுவனங்கள் விவகாரத்துறையின் திவால் நடைமுறை சட்ட மையத்தின் தலைவர் டாக்டர் கே.எல். திங்ரா உள்ளிட்ட புகழ்பெற்ற தொழில்துறை வல்லுநர்கள் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் திரு அனுஜ் ஜெயின் மற்றும் திரு பல்லவ் மொஹாபத்ரா உள்ளிட்டோரின் உரைகள் இடம்பெற்றன. இதில் கட்டுமான நிறுவனங்களின் திட்டங்கள் சார்ந்த திவால் நடைமுறைகளுக்கு தீர்வு காண்பது குறித்த கருப்பொருளில் விவாதம் நடைபெற்றது. கட்டுமானத் துறையில் சொத்துகள் தொடர்பான தகராறுகளுக்கு தீர்வு காண்பதில் இந்திய திவால் நடைமுறை சட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. துறை சார்ந்த நிபுணர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், திவால் நிலை போன்றவற்றுக்கு தீர்வு காண்பதற்கான திறன்கள் குறித்தும் திரு மொஹாபத்ரா எடுத்துரைத்தார்.

திவால் தொழில்முறை நிறுவனங்கள், சட்ட நிறுவனங்கள், சொத்து மறுசீரமைப்பு நிறுவனங்கள் மற்றும் கல்வியாளர்களைச் சேர்ந்த பல்வேறு வல்லுநர்கள் இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

இந்த மாநாடு தொழில்துறை வல்லுநர்களுக்கு அறிவைப் பரிமாறிக் கொள்வதற்கும், திவால் நடைமுறைகள் தொடர்பான செயல்பாடுகளின் முன்னேற்றத்திற்கும் முக்கிய தளமாக அமைந்தது.

## ஆயுஷ் மருத்துவமுறைகளின் தரவு மற்றும் சான்றுகள் அடிப்படையிலான ஆராய்ச்சியின் உலகளாவிய அறிக்கை

சென்னை, 20 பிப்ரவரி 2025: பாரம்பரிய மருத்துவத்தின் உலகளாவிய அங்கீகாரத்திற்கான ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாக உலக சுகாதார அமைப்பு நோய்கள் குறித்த சர்வதேச வகைப்பாட்டிற்கு ஏற்ப அதன் புதுப்பிக்கும் நடைமுறைகளை அறிவித்துள்ளது. இந்த நடைமுறையின்படி பாரம்பரிய மருத்துவ முறைகளுக்கான புதிய தொகுதியை அறிமுகப்படுத்துகிறது. இது ஆயுர்வேதம், சித்தா, யுனானி தொடர்பான பாரம்பரிய மருத்துவ முறைகளின் முறையான கண்காணிப்பு மற்றும் உலகளாவிய ஒருங்கிணைப்பில் ஒரு முக்கிய நிலையைக் குறிக்கிறது.

ஆயுர்வேதம், சித்தா, யுனானி மருத்துவ முறைகளுக்கான நெறிமுறைகள் ஐசிடி-11 டிஎம்-2 ஜனவரி 10, 2024 அன்று, புதுதில்லியில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், ஆண்டு முழுவதும் நடைபெற்ற சோதனை மற்றும் விவாதங்களைத் தொடர்ந்து இந்த புதுப்பிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது 2024 நவம்பர் மாதத்தில் மலேசியாவில் உள்ள தேசிய சுகாதார நிறுவனத்தில் நடைபெற்ற உலக சுகாதார அமைப்பின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது.

உலக சுகாதார அமைப்பின் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சுகாதாரக் கட்டமைப்பில் பாரம்பரிய மருத்துவத்தை சேர்ப்பது என்பது ஆயுர்வேதம், சித்தா மற்றும் யுனானி ஆகியவை அதிகாரப்பூர்வமாக ஆவணப்படுத்தப்பட்டு ஐசிடி -11 பட்டியலில் வகைப்படுத்தப்படுவதை உறுதி செய்கிறது. உலகளாவிய சுகாதார அறிக்கை, ஆராய்ச்சி மற்றும் கொள்கை வகுப்பதில் இந்த பாரம்பரிய மருத்துவ முறைகளின் அந்தஸ்து நிலையை இந்த உள்ளடக்கல் உயர்த்தி உள்ளது.

## புதிய ஃபாஸ்டேக் விதி குறித்த விளக்கம்

சென்னை, 20 பிப்ரவரி 2025: ஃபாஸ்டேக் குறியீட்டை கண்டறிவதற்கு 60 நிமிடங்களுக்கு முன்பும், கண்டறிந்த 10 நிமிடங்களுக்குப் பிறகும் செயல்பாட்டில் இல்லாத ஃபாஸ்டேக் பரிவர்த்தனைகளை நிராகரிக்கும் விதியை மாற்றுவது தொடர்பான சில நாளிதழ்களில் வெளிவந்த செய்திகளைச் சுட்டிக்காட்டி, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சுற்றறிக்கை எண் என்பிசிஐ/2024-25/என்இதிசி/004ஏ,-ன்படி தேசிய கட்டண நிறுவனம் 28.01.2025 அன்று வெளியிட்ட ஃபாஸ்டேக் நடைமுறைகளில் வாடிக்கையாளர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

வாகனங்கள் சுங்கச்சாவடிகளைக் கடக்கும்போது ஃபாஸ்டேக் வில்லையின் செயல்பாட்டு நிலை குறித்து அதனை விநியோகித்த வங்கிக்கும், வாடிக்கையாளரின் வங்கிக்கும் இடையிலான தகராறுகளைத் தீர்ப்பதற்கு வசதியாக தேசிய கட்டண நிறுவனம் இந்த சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது. சுங்கச் சாவடிகளை கடந்து செல்லும் வாகனங்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் ஃபாஸ்டேக் மூலம் சுங்க கட்டணப் பரிவர்த்தனைகளை உறுதி செய்வதையும் சுற்றறிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது, இதனால் வாடிக்கையாளர்கள் காலதாமத பரிவர்த்தனைகளால் எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை.

தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகள் அனைத்திலும் ஐசிடி 2.5 நெறிமுறையில் இயங்குகின்றன, இது நிகழ்நேர குறிச்சொல் நிலையை வழங்குகிறது, எனவே ஃபாஸ்டேக் முறையில் வாடிக்கையாளர்கள் சுங்கச்சாவடியை கடப்பதற்கு முன்பு எந்த நேரத்திலும் அதனை ரீசார்ஜ் செய்து கொள்ளலாம்.

மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள சில சுங்கச்சாவடிகளில் இதுபோன்ற ஐசிடி 2.5 நெறிமுறைக்கு விரைவில் மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

வங்கிகளில் நேரடியாக ரீசார்ஜ் செய்வதற்கான தேவைகளை நீக்குவதற்கு ஃபாஸ்டேக் வாடிக்கையாளர்கள் தங்களது ஃபாஸ்டேக் கணக்கில் போதிய வைப்புத் தொகையை இருப்புவைக்க ஏதுவாக யுபிஐ/நடப்பு/சேமிப்பு கணக்குகளுடன் தானியங்கி முறையில் ரீசார்ஜ் செய்வதற்கான அமைப்பின் கீழ் இணைக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். யுபிஐ, இணையதள வங்கி சேவை மற்றும் பல்வேறு மின்னணு கட்டண வழிமுறைகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்கள் தங்களது ஃபாஸ்டேக் இருப்பு தொகையை எந்த நேரத்திலும் ரீசார்ஜ் செய்து கொள்ளலாம்.

## இந்திய கடற்படையின் முதலாவது பயிற்சி படைப்பிரிவு கம்போடியாவின் சிஹானுக்வில் துறைமுகத்திலிருந்து புறப்பட்டது

சென்னை, 20 பிப்ரவரி 2025: இந்தியக் கடற்படைக் கப்பல் (ஐஎன்எஸ்) சுஜாதா, இந்தியக் கடலோரக் காவல்படைக் கப்பல் (ஐசிஜிஎஸ்) வீரா ஆகியவை மூலம் இந்திய கடற்படையின் முதலாவது பயிற்சி படைப்பிரிவு வெற்றிகரமாக பயணத்தை நிறைவு செய்து கம்போடியாவின் சிஹானுக்வில்லில் இருந்து 2025 பிப்ரவரி 17 அன்று புறப்பட்டது. மூன்று நாள் பயணத்தின் போது, இந்தியக் கடற்படை, ராயல் கம்போடிய கடற்படையுடன் இணைந்து நட்புறவை வலுப்படுத்தும் வகையில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டது.

ஐஎன்எஸ் சுஜாதா மற்றும் ஐசிஜிஎஸ் வீரா அதிகாரிகளுடன் இந்திய பயிற்சிப் பிரிவின் உயர் அதிகாரி ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டார். விரிவான கடல்சார் ஒத்துழைப்பையொட்டி பிராந்திய கடற்படைகளுடன் இந்திய கடற்படையின் ஈடுபாடு குறித்து சந்திப்பின் போது எடுத்துரைக்கப்பட்டது. இந்த துறைமுக சந்திப்பின் போது இந்தியப் பயிற்சி படைப் பிரிவு உயர் அதிகாரி கேப்டன் அன்சுல் கிஷோர் ராயல் கம்போடிய கடற்படை தளபதி அட்மிரல் டீ வின்ஹை பெனோம் பென்ஹில் உள்ள கடற்படை தலைமையகத்தில் சந்தித்தார். இருதரப்பு பரஸ்பரப் பயிற்சி, கூட்டு பயிற்சி, பிராந்திய பாதுகாப்பு, நல்லெண்ண நடவடிக்கைகள் குறித்து இவர்கள் கலந்துரையாடினர்.

## 13-வது மலேசியா-இந்தியா பாதுகாப்பு ஒத்துழைப்புக் குழு கூட்டம் கோலாலம்பூரில் நடைபெற்றது

சென்னை, 20 பிப்ரவரி 2025: மலேசியா-இந்தியா இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்புக் குழுவின் 13-வது கூட்டம் 2025 பிப்ரவரி 19-ம் தேதி கோலாலம்பூரில் நடைபெற்றது. மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளர் திரு ராஜேஷ் குமார் சிங், மலேசிய பாதுகாப்பு அமைச்சகத்தின் தலைமைச் செயலாளர் திரு லோக்மான் ஹக்கீம் பின் அலி ஆகியோர் இந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். அண்மையில் இரு நாட்டு ஆயுதப் படைகளுக்கும் இடையே வளர்ந்து வரும் ஒத்துழைப்பு குறித்து இருதரப்பும் மகிழ்ச்சி தெரிவித்தன. பிராந்திய மற்றும் உலகளாவிய விவகாரங்களில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்து விரிவான விவாதங்கள் நடைபெற்றன. இணையதளப் பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில்நுட்பங்களில் பரஸ்பரம் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளிடையே ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வழிவகைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. சர்வதேச விவகாரங்கள் குறித்து ஆலோசிப்பதற்கான பணிக்குழுவை உருவாக்குவது தொடர்பாக இறுதி செய்யப்பட்ட வரைவு விதிமுறைகளை இருநாடுகளும் பரிமாறிக் கொண்டன.

இந்தியாவின் கிழக்கு கொள்கை, கடல்சார் ஒத்துழைப்பு (பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி) ஆகியவை இந்தோ-பசிபிக் பெருங்கடல் பகுதியில் மலேசியாவை இந்தியாவின் ஒரு முக்கிய கூட்டாளி நாடாக முன் நிறுத்துகிறது.

## பழங்குடியினருக்கான தேசிய ஆணையம் தனது 22-வது நிறுவன தினத்தை கொண்டாடியது

சென்னை, 20 பிப்ரவரி 2025: பழங்குடியினருக்கான தேசிய ஆணையத்தின் ஆக்கப்பூர்வமான முன்முயற்சிகளை மத்திய பழங்குடியினர் நல அமைச்சர் திரு ஜூவல் ஓரம் பாராட்டினார். பழங்குடியினருக்கான தேசிய ஆணையத்தின் 22-வது நிறுவன நாள் கொண்டாட்டத்தில் கூடியிருந்தவர்களிடையே உரையாற்றிய அவர், அரசியலமைப்புச் சட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி வன உரிமைகள் சட்டத்தை அமல்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும் ஆணையத்தின் முக்கியப் பங்கினை அமைச்சர் வலியுறுத்தினார்.

பழங்குடியினர் நல அமைச்சகம், ஆணையத்துடன் இணைந்து, பழங்குடியின சமூகங்களுக்கு சிறந்த, கண்ணியமான வாழ்க்கை, சமூக நீதி மற்றும் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்ய தொடர்ந்து பணியாற்றும் என்றும் திரு ஜூவல் ஓரம் உறுதியளித்தார். பழங்குடியினருக்கான மத்திய அரசின் முக்கிய முன்முயற்சிகளை எடுத்துரைத்த அவர், ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகள், மெட்ரிக் படிப்புக்கு முந்தைய மற்றும் பிந்தைய கல்வி உதவித்தொகைகள், தேசிய வெளிநாட்டு கல்வி உதவித்தொகை போன்ற திட்டங்கள் பற்றி குறிப்பிட்டார். மேலும், சிறப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக நாடு முழுவதும் 75 குறிப்பாக பாதிக்கக்கூடிய பழங்குடியின குழுக்களை அடையாளம் காண்பது குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

நிறுவன நாள் நிகழ்ச்சியில் உரையாற்றிய பழங்குடியினருக்கான தேசிய ஆணையத்தின் தலைவர் திரு அந்தர் சிங் ஆர்யா, பல்வேறு மாநிலங்கள், மாவட்டங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்ய 100 நாள் செயல் திட்டத்தை ஆணையம் வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது என்றார். ஆணையத்தின் பணிகள் மற்றும் சாதனைகளை எடுத்துரைத்த அவர், பழங்குடியினரின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும், அவர்களின் வளர்ச்சியை உறுதி செய்வதிலும் ஆணையம் உறுதியாக உள்ளது என்றார். யூசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையத்தின் தலைவர் திரு ஹன்ஸ்ராஜ் கங்காராம் அஹிர், பட்டியலின வகுப்பினருக்கான தேசிய ஆணையத்தின் உறுப்பினர் திரு வடேபள்ளி ராம்சந்தர், பல்வேறு தேசிய ஆணையங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் செயலாளர்கள், பழங்குடி சமூகங்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் இந்தியா எரிசக்தி வாரம் 2025 இல் நிலையான இயக்கத்திற்கான அதன் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது

திருச்சி 20, பிப்ரவரி 2025: 2047 ஆம் ஆண்டுக்குள் எரிசக்தி சுதந்திரம் மற்றும் 2070க்குள் நிகர பூஜ்ஜியத்திற்கான இந்தியாவின் பார்வைக்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தி, டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் (டி.கே.எம்) இன்று டெல்லியில் 11 முதல் 14 பிப்ரவரி 2025 வரை நடைபெறும் இந்திய எரிசக்தி வாரம் 2025 இல் பங்கேற்றது. இந்திய எரிசக்தி வாரம் 2025 (ஐஇடபிள்யு) எரிசக்தி தற்சார்பை உணரவும், கார்பன் உமிழ்வைக் குறைக்கவும் நடைமுறை மற்றும் அளவிடக்கூடிய தூய்மையான எரிசக்தி தீர்வுகளை காட்சிப் படுத்துவதற்கான ஒரு முக்கியமான தளமாக செயல்படுகிறது. இந்த நிகழ்வு உலகளாவிய அரசியல் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள், சிந்தனைத் தலைவர்கள், வல்லுநர்கள் மற்றும் இறுதி பயனர்களை ஒன்றிணைத்து எரிசக்தி காட்சி, தொழில்நுட்பங்கள், தொழில்துறை போக்குகள் மற்றும் கொள்கை கண்ணோட்டம் குறித்து விவாதிக்கிறது.




உள்நாட்டு பசுமை ஆற்றலால் இயக்கப்படும் நிலையான இயக்கம் தீர்வுகளை வழங்குவதில் வலுவான கவனம் செலுத்துவதன் மூலம், டி.கே.எம் அதன் பல பாதை அணுகுமுறைக்கு ஏற்ப பல்வேறு மாற்று பவர்டிரெய்ன்களை காட்சிப்படுத்தியது, இது மாற்றத்தை வேகத்திலும் அளவிலும் கொண்டு வருவதற்கான காலத்தின் தேவையை பிரதிபலிக்கிறது.

மின்மயமாக்கல் மற்றும் மாற்று எரிபொருள்களை உள்ளடக்கிய பல பசுமை ஆற்றல் பாதைகள் உள்ளன, அவை போக்குவரத்துத் துறைக்கு கார்பன் தடம் குறைப்பதோடு புதைபடிவ எரிபொருள்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்க உதவும். இந்தியாவின் எரிசக்தி கலவை, அதன் யூன்முகப்படுத்தப்பட்ட நுகர்வோர் சுயவிவரம் மற்றும் தேவைகள், உள்கட்டமைப்பு தயார்நிலை மற்றும் 'ஆத்மா நிர்பார்' என்ற அரசாங்கத்தின் பார்வை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, 'மேக் இன் இந்தியா' மீது கவனம் செலுத்துவதன் மூலம் நாட்டிற்கு பொருத்தமான பல்வேறு தூய்மையான தொழில்நுட்பங்களை உருவாக்க டி.கே.எம் முயற்சிக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் கார்ப்பரேட் விவகாரங்கள் மற்றும் ஆளுமை பிரிவின் நாட்டின் தலைவர் மற்றும் நிர்வாக துணைத் தலைவர் விக்ரம் குலாட்டி கூறுகையில், "எரிசக்தி, இயக்கம் மற்றும் தொழில்நுட்ப வீரர்களை ஒரே மேடையின் கீழ் கொண்டு வருவதில் இந்தியா எரிசக்தி வாரம் முக்கிய பங்கு வகிக்கிறது. முழுமையான சுற்றுச்சூழல் மேற்பார்வையின் முயற்சியில், டொயோட்டா குளோபல் சுற்றுச்சூழல் சவால் 2050 (திஇசி 2050) 2015 இல் அறிவிக்கப்பட்டது, இது கார்பன் உமிழ்வு அதிகரிப்பு, நீர் பற்றாக்குறை மற்றும் பல்லுயிர் இழப்பு போன்ற சுற்றுச்சூழல்

பிரச்சினைகளை நிவர்த்தி செய்கிறது. கிரகம் மற்றும் சமூகத்தில் நிகர நேர்மறையான தாக்கத்தை உருவாக்கும் கொள்கையால் வழிநடத்தப்பட்டு, திஇசி 2050 சுத்தமான எரிசக்தி தத்தெடுப்பு மற்றும் ஆற்றல் செயல்திறனை மேம்படுத்துவதற்கான உத்திகளை ஒருங்கிணைக்கிறது, இதனால் ஆலை செயல்பாடுகள் மற்றும் முழு மதிப்பு சங்கிலியையும் வாகன உற்பத்திக்கு அப்பால் செல்கிறது.

# ஸ்மார்ட் ரைடிங் அனுபவத்தில் புரட்சியை ஏற்படுத்த ஜியோ திங்ஸ¬டன் கைகோர்க்கும் பியூர் ஈவி

ஹைதராபாத், 20 பிப்ரவரி 2025: இந்தியாவின் முன்னணி இரு சக்கர வாகன உற்பத்தியாளர்களில் ஒன்றான பியூர் ஈவி நிறுவனமானது ஜியோ பிளாட்ஃபார்ம்ஸ் லிமிடெட்டின் துணை நிறுவனமான ஜியோ திங்ஸ் லிமிடெட் உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அதன்படி, ஸ்மார்ட் டிஜிட்டல் கிளஸ்டர்கள் மற்றும் டெலிமேடிக்ஸ் ஆகியவற்றுக்கான மின்சார வாகனங்களில் ஒருங்கிணைக்கிறது. மேம்பட்ட ஐஓதி தீர்வுகள், தடையற்ற இணைப்பு மற்றும் முழுமையான டிஜிட்டல் ஒருங்கிணைப்பைப் பயன்படுத்தி பயனர் அனுபவத்தை மறுவரையறை செய்வதை இந்தக் கூட்டாண்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.




பியூர் ஈவி ஆனது இ2டபிள்யு களில், முழுமையான ஐஓதி தீர்வுகளை உள்ளடக்கிய ஜியோ திங்ஸ் ஸ்மார்ட் டிஜிட்டல் கிளஸ்டர்களை ஆராய்ந்து, அவற்றின் செயல்பாடு மற்றும் ஊடாடும் தன்மையை மேம்படுத்தும். 4ஜி இணைப்பால் இயக்கப்பட்ட டெலிமாடிக்ஸ் இணைப்பது, வாடிக்கையாளர்கள் வாகன செயல்திறனை நிகழ்நேரத்தில் கண்காணிக்கவும், மிகவும் திறமையான செயல்பாடுகளுக்கு பயனுள்ள நுண்ணறிவுகளைப் பெறவும் உதவும்.

ஜியோ திங்ஸ் 4ஜி ஸ்மார்ட் டிஜிட்டல் கிளஸ்டர், ஆண்ட்ராய்டு ஓப்பன் சோர்ஸ் ப்ராஜெக்ட் (ஏஓஎஸ்பி) அடிப்படையிலான ஆவ்னி ஓஎஸ் ஐப் பயன்படுத்துகிறது. இது நிகழ்நேர தரவு பகுப்பாய்வு, இரு சக்கர வாகன இடைமுக தனிப்பயனாக்கம் மற்றும் முழு ஹெச்டி+ தொடுதிரை காட்சி இணக்கத்தன்மையை வழங்குகிறது.

இந்த புரட்சிகரமான டிஜிட்டல் கிளஸ்டர் ஓஇஎம்-கள் தங்கள் தயாரிப்புகளில் ஐஓதி தீர்வுகளை ஒருங்கிணைப்பதை விரைவுபடுத்த அனுமதிக்கிறது.

ஒருங்கிணைந்த மற்றொரு தீர்வு ஜியோ ஆட்டோமோட்டிவ் ஆப் சூட் (ஜேஏஎஸ்). இது ஜியோஸ்டோர், இசை ஸ்ட்ரீமிங், வலை உலாவுதல், ஹேண்ட்ஸ்-ஃப்ரீ குரல் உதவி, நேவிகேஷன், கேமிங் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய இரு சக்கர வாகன பயனர்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பல்வேறு தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளை வழங்குகிறது.

"எங்கள் வாகனங்களுக்குள் ஜியோ திங்ஸ் இன் உயர்ந்த ஐஓதி திறன்களை பெறுவதானது, பியூர் ஈவி இன் தயாரிப்புகளை மிக உயர்ந்த தொழில் தரத்திற்கு உயர்த்துவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் சாதனையாகும்" என்று பியூர் ஈவி இன் நிறுவனர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் நிஷாந்த் டோங்காரி கூறினார்.

"எங்கள் வாகனங்களின் செயல்திறன் மற்றும் ஊடாடும் தன்மையை மேம்படுத்துவதன் மூலம் மின்சார இயக்கத்தை மறுவரையறை செய்வதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். இந்த ஆய்வு, ஈவி சுற்றுச்சூழல் அமைப்பை மறுவரையறை செய்வதற்கான சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவதில் ஒரு முக்கிய படியைக் குறிக்கிறது, மேலும் எங்கள் வாடிக்கையாளர்கள் மேம்பட்ட இணைப்பு, செயல்பாடு மற்றும் வசதியிலிருந்து பயனடைவதை உறுதி செய்கிறது."என்றார்.

இதுகுறித்துப் பேசிய ஜியோ பிளாட்ஃபார்ம்ஸ் லிமிடெட்டின் தலைவர் ஆஷிஷ் லோதா, "மின்சார மொபிலிட்டி துறையில் புதுமை மற்றும் சிறந்து விளங்குவதற்கான எங்கள் பார்வையைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு நிறுவனமான பியூர் ஈவி உடன் ஒத்துழைப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

எங்கள் மேம்பட்ட ஐஓதி தீர்வுகளை ஒருங்கிணைப்பதன் மூலம், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த மின்சார இருசக்கர வாகன அனுபவத்தை வழங்குவதிலும், செயல்திறன் மற்றும் இணைப்பிற்கான புதிய அளவுகோல்களை அமைப்பதிலும் பியூர் ஈவி ஐ ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். மின்சார இருசக்கர வாகனத் துறையின் எதிர்காலத்தை வடிவமைப்பதிலும், நிலையான போக்குவரத்து தீர்வுகளை பரவலாக ஏற்றுக்கொள்வதிலும் இந்த கூட்டாண்மை ஒரு முன்னேற்றமாகும்." என்றார்.

# திரு.வி.க.நகர் பகுதியில் தங்க நகைகளை புதுப்பித்து தருவதாக கூறி 45 சவரன் தங்க நகைகள் மற்றும் பணம் ரூ.8 இலட்சம் பெற்று மோசடி செய்த முன்னாள் நகைக்கடை உரிமையாளர் கைது.

சென்னை, 20 பிப்ரவரி 2025: சென்னை, புழல், எம்.எம்.பாளையம், ரெட்டி தெருவில் வசித்து வரும் வரலட்சுமி, வ/57, க/பெ.ரவிச்சந்திரன் என்பவர் 2017ம் ஆண்டு சரவணகுமார் என்பவர் பெரம்பூர், வீனஸ், பேப்பர் மில்ஸ் சாலையில், நடத்தி வந்த மஹா ஜுவல்லர்ஸ் என்ற நகைக்கடைக்கு அடிக்கடி சென்று நகைகள் வாங்கியும், புதிதாக செய்ய சொல்லியும் வாடிக்கையாளரான நிலையில், 2017ம் வருடம் வரலட்சுமி தனது தங்க நகைகளை புதுப்பித்து கொடுக்கும்படி கூறி 45 சவரன் தங்க நகைகள் மற்றும் புதிய நகைகளை வாங்க ரூ.8 இலட்சம் பணமும் கொடுத்தார். ஆனால் சரவணகுமார் தங்க நகைகளும், பணமும் திரும்ப தராமல் காலம் தாழ்த்தி வந்த நிலையில், மேற்படி நகைக்கடையை மூடிவிட்டு தலைமறைவானதாகவும், தனது 45 சவரன் யூங்க நகைகள் மற்றும் பணம் ரூ.8 இலட்சத்தை பெற்றுத் தரும்படியும் வரலட்சுமி கே-9 திரு.வி.க.நகர் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்தனர்.

கே-9 திரு.வி.க. நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்ததில், எதிரி சரவணகுமார் நகைககடையில் நஷ்டம் ஏற்பட்டதால், புகார்தாரரின் 45 சவரன் தங்க நகைகள் மற்றும் ரூ.8 இலட்சம் பணத்தை அபகரித்துக் கொண்ட நிலையில், மேற்படி தங்க நகைக்கடையை மூடிவிட்டு தலைமறைவானதும் தெரியவந்தது. அதன்பேரில், காவல் குழுவினர் தீவிர தேடுதலில் ஈடுபட்டு மேற்படி மோசடியில் ஈடுபட்ட எதிரி சரவணகுமார், வ/43, த/பெ.பாபுலால், வீனஸ் மார்க்கெட் தெரு, பெரம்பூர், சென்னை என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி சரவணகுமார் விசாரணைக்குப் பின்னர் 18.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# 2014ம் ஆண்டில் நடந்த கொடுங்கையூர் காவல் நிலைய கொலை வழக்கில் எதிரி மீது குற்றம் நிரூபிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதித்து 19வது கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு.

சென்னை, 20 பிப்ரவரி 2025:2014ம் ஆண்டு, சென்னை, கொடுங்கையூர், திருவள்ளூர் சாலையில் வசித்து வந்த அருண், வ/20, த/பெ.கார்மேகம் என்பவர் 12.10.2014 அன்று இரவு அவரது வீட்டு வாசலில் தூங்கிக் கொண்டிருந்தபோது, யாரோ அவரது தலையில் கல்லை போட்டு கொலை செய்தது தொடர்பாக, பி-6 கொடுங்கையூர் காவல் நிலையத்தில் கொலை பிரிவில் வழக்குப் பதிவு செய்து, விஜி (எ) விஜயகுமார், வ/27, த/பெ.காதர்பாபு, விஜிபி மேடு, காரனோடை, திருவள்ளூர் மாவட்டம் என்பவரை கைது செய்து, நீதிமன்றக் ஞாவலுக்கு உட்படுத்தினர்.



இவ்வழக்கு, பி-6 கொடுங்கையூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினரால் முறையாக விசாரிக்கப்பட்டு, இறுதி அறிக்கை தயார் செய்து, சென்னை, சிங்காரவேலர் மாளிகை வளாகத்தில் உள்ள 19வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்களின் கொலை, கொள்ளை போன்ற கொடுங்குற்ற வழக்குகளில் நீதிமன்ற நிலுவை வழக்குகளை காவல் நிலைய அதிகாரிகள் தொடர்ச்சியான கண்காணிப்புடன் சிதிமன்ற நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தரும் வரை சீரிய முயற்சி எடுக்க வேண்டும் என அனைத்து காவல் அதிகாரிகளுக்கும் வழங்கிய உத்தரவின்பேரில், இதன் தொடர்ச்சியாக மேற்கண்ட கொலை வழக்கில் தொடர்ச்சியாக சாட்சிகள் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற வழக்கு விசாரணை நிறைவடையும் வரை நிலைய ஆய்வாளர், நீதிமன்ற காவல் ஆளிநர் சீரிய பணியாற்றி விசாரணை முடிவடைந்து, நீதிமன்றத்தால் இறுதி தீர்ப்பு 18.02.2025 அன்று வழங்கப் பட்டது.

இக்கொலை வழக்கில் நீதிமன்ற விசாரணையில் கைது செய்யப்பட்ட மேற்படி எதிரி விஜயகுமார் மீது குற்றம் நிரூபிக்கப் பட்டதால், எதிரி விஜயகுமாருக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.1,000/- அபராதம் விதித்து கனம் 19வது கூடுதல் அமர்வு நீதிமன்ற சிதிபதி அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேற்படி வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்து, நீதிமன்ற ரூடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி குற்றவாளிக்கு உரிய தண்டனை பெற்று தந்த பி-6 கொடுங்கையூர் காவல் நிலைய ஆய்வாளர், அரசு தரப்பு வழக்குறைஞர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணி காவல் குழுவினரை காவல் உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப் பெருந்தகை, எம்எல்ஏ அவர்கள் விடுக்கும் அறிக்கை

சென்னை, 20 பிப்ரவரி 2025: இந்திய அரசமைப்பு சட்டத்தின்படி உறுப்பு 353-இல், இந்தியாவில் ஆட்சி மொழிகளாக இந்தியும், ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. அதற்கு பிறகு, இந்தி பேசாத மக்கள் மீது இந்தி திணிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டின் பேரில், அன்றைய குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் தமிழகம் வரும் போது, கருப்புக் கொடி காட்டப்படும் என்று தி.மு. கழகம் அறிவித்தது. அதை அறிந்தவுடனேயே அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் 3 ஆகஸ்ட் 1960 இல் மக்களவையில் தி.மு.க.வின் இரு உறுப்பினர்களில் ஒருவராக இருந்த திரு. ஈ.வெ.கி. சம்பத் அவர்களை அழைத்து பேசி, இந்தி பேசாத மக்கள் மீது இந்தி திணிக்கப்படாது அவர்கள் விரும்பும் வரை ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கும் என்று வழங்கிய கடிதத்தின் மூலமாக உறுதிமொழி அளித்தார். அந்த கடிதத்தை திரு. சம்பத் அவர்கள் அன்றைய தி.மு. கழக தலைவர் அண்ணாவிடம் அளித்த பிறகு, தி.மு.க. அறிவித்த கருப்புக் கொடி போராட்டம் ரத்து செய்யப்பட்டது. இரு உறுப்பினர்கள் மட்டுமே இருந்த தி.மு.க.வின் கோரிக்கையை ஜனநாயக உணர்வோடு ஏற்றுக் கொண்ட பண்டித நேரு அவர்களை அன்று கடற்கரையில் நடந்த பொதுக் கூட்டத்தில் அண்ணா பாராட்டி மகிழ்ந்ததை அனைவரும் அறிவார்கள். இதை அண்ணாமலை போன்றவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

பண்டித நேரு மறைவிற்குப் பிறகு, அவர் கொடுத்த உறுதிமொழிக்கு சட்டப் பாதுகாப்பு வழங்க வேண்டுமென்ற நோக்கத்தில் பிரதமர்களாக பொறுப்பு வகித்த லால் பகதூர் சாஸ்திரியும், அன்னை இந்திரா காந்தியும் ஆட்சி மொழிகள் சட்டம் - 1963 இல் திருத்தம் கொண்டு வந்தார்கள். இதுகுறித்து நாடாளுமன்றத்தில் 28 மார்ச் 1968 அன்று நடைபெற்ற விவாதத்தில் அன்றைய உள்துறை அமைச்சர் ஒய்.பி. சவான் அவர்கள் தெரிவித்தபடி, இத்திருத்தச் சட்டத்தை மேலும் வலிமைப் படுத்தி இந்தி பேசாத மக்களை பாதுகாக்கும் வகையில் சில தீர்மானங்கள் இதனுடன் இணைக்கப் பட்டுள்ளன. இதன்படி இந்தி பேசாத மக்கள் மீது இந்தியை திணிப்பதற்கான வாய்ப்புகள் முற்றிலும் இல்லாத நிலை உருவாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டதை இங்கு நினைவு கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இதன்படி, இந்தியாவில் உள்ள நாகாலாந்து போன்ற சிறிய மாநிலம் விரும்பினாலும் கூட ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கும் என்று சட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. சூன்றிய அரசு மாநிலங்களுக்கு அனுப்புகிற கடித போக்குவரத்து அனைத்தும் ஆங்கிலத்தில் இருக்கும் என்று உறுதி செய்யப்பட்டதோடு, இந்தி பேசாத மக்கள் மீது இந்தி திணிக்கப் பட வாய்ப்பே இல்லாத நிலையில் சட்டத் திருத்தம் பாதுகாப்பு கேடயமாக அமைந்தது. இத்தகைய பின்னணியில் தான் மொழி பிரச்சினைக்கு அன்றைய காங்கிரஸ் அரசுகள் தீர்வு கண்டது. ஆனால், அதற்கு நேர்மாறாக ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டு மக்கள் மீது தற்போது மும்மொழி திட்டத்தின் மூலம் இந்தி மொழியை திணிக்க பகிரங்கமாக முயற்சி செய்கிறது. மும்மொழி திட்டத்தை திணிக்கிற தேசிய கல்விக் கொள்கையை ஏற்க வேண்டும், இந்துத்வா கொள்கைகளை பரப்புகிற பி.எம்.ஸ்ரீ பள்ளிகளை திறக்க வேண்டும், இதை ஏற்கவில்லை என்றால் தமிழக கல்வித்துறைக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய ரூபாய் 2152 கோடியை வழங்க முடியாது என்று ஆணவத்தோடு ஒன்றிய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்தார். இதை கண்டிக்கிற வகையில் தான் மொழித் திணிப்பிற்கு எதிராக தி.மு.க. ஏற்பாடு செய்த கண்டன கூட்டத்தில் தோழமை கட்சித் தலைவர்கள் பங்கேற்று ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கடும் எதிர்ப்பை தெரிவித்தார்கள்.

தமிழ்நாடே மொழித் திணிப்பிற்கு எதிராக திரண்டு எழுகிற சூழலில் மும்மொழி திட்டத்திற்கு ஆதரவாக தமிழக பா.ஜ.க. 90 நாட்கள் கையெழுத்து இயக்கம் நடத்தப் போவதாக அண்ணாமலை அறிவித்திருக்கிறார். அண்ணாமலை அறிவிப்பின் மூலம் தமிழ்நாட்டு மக்களின் ளுணர்வுகளுக்கு எதிராக இந்தியை திணிக்காமல் விட மாட்டோம் என்று கங்கணம் கட்டிக் கொண்டு பா.ஜ.க. செயல்பட்டு வருகிறது. இத்தகைய அராஜக ஆணவப் போக்கிற்கு தமிழக மக்கள் நிச்சயம் உரிய பாடத்தை புகட்டுவார்கள்.

மேலும், தமிழகத்தில் தனியார் பள்ளிகளில் படிக்கும் 56 லட்சம் மாணவர் களில் குறைந்தது 30 லட்சம் பேர் மும்மொழி திட்டத்தின் மூலம் இந்தி படிக்கும் போது, தமிழக அரசு பள்ளிகளில் படிக்கும் 52 லட்சம் மாணவர்களுக்கு அந்த வாய்ப்பு மறுக்கப் படுவது ஏன் ? என்று அண்ணாமலை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை எழுப்பியிருக்கிறார். தமிழ்நாட்டில் உள்ள மொத்த பள்ளிகளின் னுண்ணிக்கை சுமார் 38,000. இதில் தனியார் பள்ளிகள் 12,690. சி.பி.எஸ்.இ. பள்ளிகள் வெறும் 1835 மட்டுமே. இதில் மும்மொழி திட்டத்தின்படி கட்டாய பாடமாக இந்தி கற்பிக்கப் படுகிறது. பிற மாநிலங்களில் இருந்து குடிபெயர்ந்து தமிழகத்திற்கு வருகிறவர்களுக்கு வசதியாக இந்தியா முழுவதும் சி.பி.எஸ்.இ. பள்ளிகள் இருப்பதைப் போல தமிழகத்திலும் குறைந்த எண்ணிக்கையில் உள்ளன. அதேபோல, ஒன்றிய அரசின் பணியாளர்களின் வசதிக்காக கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் தமிழகம் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும் உள்ளன. இதிலும் மும்மொழி திட்டம் நடைமுறையில் உள்ளன.

இந்நிலையில் தமிழ்நாட்டில் உள்ள மொத்த பள்ளிகளில் 3.16 சதவிகித பள்ளிகளில் மட்டுமே இந்தி கட்டாய பாடமாக இருக்கிறது. மீதிமுள்ள அனைத்து பள்ளிகளிலும் 1968 இல் தி.மு.க. ஆட்சியில் அறிமுகம் செய்யப் பட்ட இருமொழி கொள்கையின்படி தாய் மொழி தமிழோடு, ஆங்கிலம் என இருமொழி கொள்கை கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

அரசு பள்ளிகளில் படிக்கிற 43 லட்சம் மாணவர்கள் மீது இந்த இருமொழிக்கு விரோதமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்தி மொழியை திணிக்க முயற்சிப்பதை எதிர்த்து தான் தமிழ்நாட்டில் இன்றைக்கு ஞொந் தளிப்பான சூழ்நிலை உருவாகி வருகிறது. தமிழகத்தின் மீது மும்மொழி திட்டத்தின்படி இந்தியை திணிக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு முயற்சி செய்யுமேயானால், ஏற்கனவே படுகுழியில் வீழ்ந்து விட்ட பா.ஜ.க., அதல பாதாளத்திற்கு தள்ளப் பட்டு அதனுடைய எதிர்காலமே சூனியமாகி விடும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

# தாது மணல் கொள்ளை: குற்றத்தை உறுதி செய்து சி.பி.ஐ விசாரணைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு!

## குற்றமிழைத்தோரின் சொத்துக்களை முடக்கி, கனிம தொழிலை அரசே நடத்த முன்வரவேண்டும்!

சென்னை, 20 பிப்ரவரி 2025: தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்றுள்ள சட்டவிரோத தாது மணல் கொள்ளை பற்றி விரிவான விசாரணை மேற்கொண்ட உயர்நீதிமன்றம், 16 ஆண்டுகளுக்கு பின் தீர்ப்பளித்துள்ளது. அதில் அரிய தாதுமணல் கொள்ளை நடந்திருப்பதை உறுதி செய்துள்ளதுடன், அரசியல்வாதிகள், அதிகாரிகள், சுரங்க நிறுவனங்கள் இடையிலான தொடர்பை சி.பி.ஐ விசாரிக்க வேண்டுமென்றும் முக்கியமான தீர்ப்பினை வழங்கியுள்ளது. இந்த தீர்ப்பு வரவேற்புக் குரியதாகும்.

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் தாது மணல் எடுப்பதற்காக உரிமம் பெற்ற 7 நிறுவனங்கள், அனுமதிக்கப்பட்ட அளவிற்கும் கூடுதலாக, அணு சக்திக்கு தேவையான அரிய கனிமம் உள்ளிட்டு எடுத்து ஏற்றுமதி செய்தன. பல லட்சம் கோடிகள் மதிப்பு வாய்ந்த இந்த அரிய கனிமங்களின் கொள்ளை, பிரண்ட்லைன் உள்ளிட்ட ஊடகங்களின் விரிவான செய்திகளின் மூலம் அம்பலப்பட்டது. அதனைத் தொடர்ந்து நீதிமன்றமும், அரசும் குறிப்பிட்ட நிறுவனங்களின் கிடங்குகளை மூடியதுடன், பல்வேறு விசாரணை குழுக்களும் அமைக்கப்பட்டன.

இது தொடர்பான வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம் மற்றும் எம். ஜோதிராமன் ஆகியோர், தாது மணல் எடுக்க தடை விதிக்கும் முன், சட்டவிரோதமாக எடுக்கப்பட்ட கடற்கரை மணலுக்காக ராயல்டி மற்றும் அபராதமாக மட்டும் ரூ 5,832.29 கோடி வசூலிக்க உத்தரவிட்டுள்ளனர். மேலும், சீல் வைக்கப்பட்டிருக்கும் கிடங்குகளிலும், தொழிற்சாலைகளிலும் குவிந்திருக்கும் சுமார் 1.4 கோடி டன் தாது மணல், அரை பதப்படுத்தப்பட்ட மணல் மற்றும் பதப்படுத்தப்பட்ட கனிமங்களின் தற்போதைய அளவு மோனோசைட் உட்பட அனைத்து வகையான க்ஷளுஆ களையும் கையாள உரிமை பெற்ற மத்திய அரசின் நிறுவனமான இந்திய அரிய மண் நிறுவனத்திற்கு (ஐசுநுடு) உடனடியாக ஒப்படைக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

பாரபட்சமற்ற விசாரணை! அபராத தொகையை முழுமையாக வசூலிப்பதுடன், கிடங்குகளில் இருக்கும் தாதுக்களை ஒப்படைத்து அதில் கிடைக்கும் லாபத்தையும் பெற்று தமிழ்நாட்டு கஜானாவில் சேர்க்க வேண்டும். இவ்வாறு முறைகேடான தொழிலில் ஈடுபட்ட நிறுவனங்களின் சொத்துக்களை அரசுடமையாக்க வேண்டும் என சி.பி.ஐ(எம்) வலியுறுத்துகிறது.

மேலும், இந்த வழக்கு விசாரணை நடந்த போதே 2018 முதல் 2022 வரை 4 ஆண்டுகளுக்கு சுமார் 16 லட்சம் டன் அளவிலான தாது மணல் கடத்தப்பட்டுள்ளது. அதில் சுமார் 6,449 டன் அளவிலான அணுசக்திக்கு தேவையான மோனோசைட் கனிமங்கள் என கண்டறியப்பட்டது. நீதிமன்றத்திற்கு உதவ நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் சுரேஷ், கார்னெட், இலுமினைட் உள்ளிட்ட தாதுமணல் தூத்துக்குடி துறைமுகம் வழியாக சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்டதை தனது அறிக்கையில் குறிப்பிட்டார். எனவே, இந்த முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் அரசியல் செல்வாக்கு படைத்தவர்கள், மேல்மட்ட அதிகாரிகள், சுங்கத்துறை மற்றும் பெரும் கார்ப்பரேட் தொடர்புடனே இந்த கொள்ளையை முன்னெடுத்திருக்க முடியும். எனவே, சி.பி.ஐ மேற் கொள்ளும் விசாரணை அனைத்து தரப்பாரையும் உள்ளடக்கி, முழு வலைப்பின்னலையும் வெளிக் கொண்டு வருவதாக அமைய வேண்டும் என சி.பி.ஐ(எம்) மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.

சட்டமன்றத்தில் விவாதம்!

இந்த வழக்கு தொடர்பாக, ஐஏஎஸ் அதிகாரிகள் ககன்தீப் சிங் பேடி, சத்யபிரதா சாஹூ மற்றும் வழக்கறிஞர் வி. சுரேஷ் ஆகியோர் சமர்ப்பித்த அனைத்து அறிக்கைகளையும் அமர்வு செல்லத்தக்கதாக அறிவித்திருக்கிறது. எனவே, தமிழ்நாடு அரசு இந்த அறிக்கைகளை சட்டமன்றத்தில் சமர்ப்பிப்பதுடன் இது தொடர்பான சிறப்பு விவாதத்தை முன்னெடுக்க வேண்டும்.

இந்த விசயத்தில் தொடக்க முதலே தீவிரமான தலையீட்டை சி.பி.ஐ(எம்) கோரி வந்துள்ளது. அரிய கனிமங்கள், தாதுமணல் உள்ளிட்டு கனிமவள தொழில் மொத்தமும் அரசின் வசமே இருக்க வேண்டும், அப்போதுதான் இயற்கை வளங்களை பாதுகாக்க முடியும், தாதுமணல் வருவாய் நேரடியாக அரசிடம் சேர்வது, மக்கள் நலத் திட்டங்களுக்கு உதவிடும். எனவே, இந்த தாதுமணல், கனிம வள தொழில்களை முற்றாக அரசுடைமையாக்கிட வேண்டும் என்று சி.பி.ஐ(எம்) சார்பில் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

# 2015ம் ஆண்டில் நடந்த திருவல்லிக்கேணி காவல் நிலைய கொலை வழக்கில் 5 எதிரிகள் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதித்து 19வது கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு.

சென்னை 20, பிப்ரவரி 2025: 2015ம் ஆண்டு, சென்னை, பம்மல், திருவள்ளுவர் தெருவில் வசித்து வந்த தரணி (எ) தரணிதரன், வ/37, த/பெ.ஹென்றி என்பவர் 20.06.2015 அன்று இரவு, சேப்பாக்கம், பெல்ஸ் சாலையிலுள்ள மசூதி அருகே இருந்தபோது, சுமார் 5 நபர்கள் தரணிதரணை கத்தியால் தாக்கிவிட்டு இருசக்கர வாகனங்களில் தப்பிச் சென்றனர். இரத்தக் காயமடைந்த தரணிதரன் அரசு பொது மருத்துவ மனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டதன்பேரில், மேற்படி சம்பவம் குறித்து டி-1 திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற் கொள்ளப்பட்டது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தரணிதரண் 22.06.2015 அன்று சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதால், இவ்வழக்கு கொலை வழக்காக மாற்றம் செய்யப்பட்டு, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரிகள் 1.கேசவன், வ/24, த/பெ.சிவா, பி.வி.கோயில் 2வது தெரு, புதுப்பேட்டை, சென்னை, 2.ராஜேந்திர பிரசாத், வ/24, த/பெ.வேல்முருகன், றி பிளாக், ஏகாம்பர பிள்ளை தெரு, மயிலாப்பூர், 3.விஜி (எ) விஜயதினேஷ், வ/25, த/பெ.கருணாநிதி, ரோட்டரி நகர் 10வது தெரு, திருவல்லிக் கேணி, 4.ஸ்ரீகாந்த், வ/24, த/பெ.பாபு, துரைசாமி தோட்டம், மேற்கு சைதாப் பேட்டை, சென்னை, 5.ஆசிப் ஜேக்கப், வ/24, த/பெ.சுசில் ஜேக்கப், கண்ணம்மாள் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை உட்பட 10 நபர்களை கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். இவ்வழக்கு, டி-1 திருவல்லிக்கேணி காவல் நிலைய காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினரால் முறையாக விசாரிக்கப்பட்டு, இறுதி அறிக்கை தயார் செய்து, சென்னை, சிங்காரவேலர் மாளிகை வளாகத்தில் உள்ள 19வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்களின் கொலை, கொள்ளை போன்ற கொடுங்குற்ற வழக்குகளில் நீதிமன்ற நிலுவை வழக்குகளை காவல் நிலைய அதிகாரிகள் தொடர்ச்சியான கண்காணிப்புடன் சிதிமன்ற நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, குற்றவாளி களுக்கு தண்டனை பெற்றுத் தரும் வரை சீரிய முயற்சி எடுக்க வேண்டும் என அனைத்து காவல் அதிகாரிகளுக்கும் வழங்கிய உத்தரவின் பேரில், இதன் தொடர்ச்சியாக மேற்கண்ட கொலை வழக்கில் தொடர்ச்சியாக சாட்சிகள் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற வழக்கு விசாரணை நிறைவடையும் வரை நிலைய ஆய்வாளர், நீதிமன்ற காவல் ஆளிநர் சீரிய பணியாற்றி விசாரணை முடிவடைந்து, நீதிமன்றத்தால் இறுதி தீர்ப்பு 19.02.2025 அன்று 'ழங்கப்பட்டது. இக்கொலை வழக்கில் நீதிமன்ற விசாரணையில் கைது செய்யப்பட்ட 10 நபர்களில் ஒரு நபர் இறந்துவிட்டதாலும், மற்ற 4 நபர்கள் இவ்வழக்கில் இருந்து விடுவிக்கப் பட்டதாலும் மற்ற 5 எதிரிகளான கேசவன், ராஜேந்திர பிரசாத், விஜி (எ) விஜயதினேஷ், ஸ்ரீகாந்த் மற்றும் ஆசிப் ஜேக்கப் ஆகியோர் மீது குற்றம் நிரூபிக்கப் பட்டதால், 5 எதிரிகளுக்கும் ஆயுள் தண்டனை மற்றும் தலா ரூ.2,000/- அபராதம் விதித்து கனம் 19வது கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேற்படி வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி 3 குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்று தந்த டி-1 திருவல்லிக்கேணி காவல் நிலைய ஆய்வாளர், அரசு தரப்பு வழக்குறைஞர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணி காவல் குழுவினரை காவல் உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.

# சென்னை பெருநகர காவல் ஆணையாளர், காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர் முகாமில் பொதுமக்களின் மனுக்களை பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

சென்னை 20, பிப்ரவரி 2025: சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்கள் சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் நடைபெற்று வரும் பொதுமக்கள் குறை தீர் முகாமில், காவல் அதிகாரிகள் பொதுமக்களின் புகார் மனுக்களை பெற்று விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் யொடர்ச்சியாக, சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்கள் இன்று (19.02.2025) புதன்கிழமை காவல் ஆணையரகத்தில் புகார் மனு கொடுக்க வந்த 24 பொதுமக்களிடம் இருந்து புகார்



மனுக்களை பெற்று, விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்நிகழ்வின்போது, துணை ஆணையாளர் (நிர்வாகம்) திரு.ரி.அதிவீர பாண்டியன் அவர்கள் உடனிருந்தார்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# பிரபல நடன இயக்குநர் கலைமாமணி ஸ்ரீதர் மாஸ்டரின் ஏ ஆர் எஸ் டான்ஸ் ஸ்கூல் நான்காவது கிளை சென்னை பெரம்பூர் ஓட்டேரியில் தொடக்கம்

சென்னை 20, பிப்ரவரி 2025: சென்னை மாநகரில் நந்தனம், அசோக் நகர் மற்றும் மயிலாப்பூர் ஆகிய இடங்களில் ஏ ஆர் எஸ் டான்ஸ் ஸ்கூல் எனும் நடனப் பள்ளியை மிகவும் சிறப்பாக நடத்தி வரும் பிரபல திரைப்பட நடன இயக்குநர் கலைமாமணி ஸ்ரீதர் மாஸ்டர், நான்காவது கிளையை பெரம்பூர் ஓட்டேரியில் திங்கட்கிழமை (பிப்ரவரி 17) தொடங்கினார்.



இயக்குநர் வெற்றிமாறன் ஏ ஆர் எஸ் டான்ஸ் ஸ்கூலை திறந்து வைக்க அமரன் புகழ் இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி வாழ்த்துரை வழங்கினார். சென்னை மேயர் பிரியா ராஜன், சென் ஹாஸ்பிடல் தலைவர் டாக்டர் எம் வெங்கடேஷ், ஐபிஎஸ் அதிகாரி ராஜேஸ்வரி, நடிகர்கள் ஜீவா, ஷாம், நகுல், இசையமைப்பாளர் அமரேஷ் கணேஷ், நடன இயக்குநர் அசோக், சுஜா, சிவா, தொலைக்காட்சி பிரபலங்கள் தங்கதுரை மற்றும் 'பிக் பாஸ்' வெற்றியாளர் முத்துக்குமரன் உள்ளிட்ட பல்துறை முக்கிய பிரமுகர்கள் ஏ ஆர் எஸ் டான்ஸ் ஸ்கூல் ஓட்டேரி கிளை தொடக்க விழாவில் பங்கேற்று ஸ்ரீதர் மாஸ்டர் மற்றும் குழுவினருக்கு மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்தனர்.

ஏ ஆர் எஸ் டான்ஸ் ஸ்கூல் பற்றி பேசிய ஸ்ரீதர் மாஸ்டர், "சிவம் குரூப்ஸ் முகிலன் மற்றும் அவரது மனைவி சௌந்தர்யா ஆகியோருடன் இணைந்து இந்த நடனப் பள்ளியை தொடங்கி இருக்கிறோம். ஏ ஆர் எஸ் என்பதன் பொருள் எனது மகள் அக்ஷதா, மனைவி ராஜலட்சுமி மற்றும் எனது பெயர்களின் முதல் எழுத்துகள் ஆகும். மருத்துவம் மூன்றாம் ஆண்டு பயிலும் எனது மகள் அக்ஷதா தனது படிப்புக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படா வண்ணம் எனக்கு இந்த முன்னெடுப்பில் உதவியாக உள்ளார்.

நடனம் கற்றுக் கொண்டால் என்ன லாபம் என்று சிலர் கேட்கிறார்கள். நடனத்தின் முதல் பலன் உடல் ஆரோக்கியம். நடனக் கலைஞர்கள் பலரும் வயதான பின்பும் நல்ல உடல் நலத்துடன் இருப்பதை நாம் காணலாம். அடுத்ததாக தங்கள் கல்வி மற்றும் தொழிலுக்கு எந்த இடையூறும் இன்றி நடனத்தை கற்றுக் கொள்ளலாம், கற்பிக்கலாம். இதற்கு எனது மகளே சிறந்த உதாரணம்," என்றார்.

ஏ ஆர் எஸ் டான்ஸ் ஸ்கூலில் அனைத்து வகை சர்வதேச நடனங்களில் இருந்து உள்ளூர் நடனங்கள் வரை சிறப்பான பயிற்சி அளிக்கப்படும் என்று தெரிவித்த ஸ்ரீதர் மாஸ்டர், நமது திரையுலகின் முக்கிய நடனமான குத்து எனப்படும் ஃபோக் வகை நடனத்திற்கு உலகளாவிய அங்கீகாரம் பெறும் முயற்சியிலும் தான் ஈடுபட்டு இருப்பதாக கூறினார்.

"தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக மூன்று தளங்கள் கொண்ட மொத்த கட்டிடமும் நடனப் பள்ளிக்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது. இதில் ஒரு தளம் முழுவதும் திரைப்பட ப்ரோமோ பாடல்களை உருவாக்குவதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் கொண்டு வடிவமைக்கப் பட்டுள்ளது. திரைப்பட தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் அவர்கள் எதிர்பார்க்காத மிகக் குறித்த செலவில் முழு ப்ரோமோ பாடலையும் இங்கு உருவாக்கலாம்," என்று ஸ்ரீதர் மாஸ்டர் கூறினார்.

திரைப்பட நடனப் பணியும் இடையூறு இன்றி தொடர்ந்து நடைபெறும் என்றும் இதுவரையிலான தனது முயற்சிகளுக்கு ஆதரவளித்த திரையுலகினரும் ரசிகர்களும் ஏ ஆர் எஸ் டான்ஸ் ஸ்கூலுக்கும் பேராதரவை வழங்குவார்கள் என்றும் ஸ்ரீதர் மாஸ்டர் நம்பிக்கை தெரிவித்தார்.

# மறதியால் சுற்றி வந்த 78 வயது மூதாட்டி காவல் கரங்கள் குழுவினரால் மீட்கப்பட்டு அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டார்

சென்னை, 20 பிப்ரவரி 2025: சென்னை பெருநகர காவல்துறையில் 21.04.2021 அன்று "காவல் கரங்கள்" உதவி மையம், 9444717100 என்ற உதவி எண்ணுடன் (24 / 7) ஆரம்பிக்கப்பட்டு, சாலையோரங்களில் ஆதரவற்ற நிலையில் கைவிடப்பட்ட மற்றும் மனநிலை பாதிக்கப்பட்ட நபர்களை மீட்டு காப்பகங்களில் தங்க வைத்து பராமரிக்கப்பட்டு "மனிதம் போற்றுவோம் மனித நேயம் காப்போம்" என்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி சேவை பணியாற்றி வருகின்றனர்.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. ஆ. அருண், இ.கா.ப., அவர்கள் உத்தரவின்பேரில், கூடுதல் காவல் ஆணையாளர் (தலைமையிடம்) திரு.கபில் குமார் சி சரட்கர், இ.கா.ப., அவர்கள் கண்காணிப்பில், நவீன காவல் கட்டுப்பாட்டறை காவல் கரங்கள் உதவி மையம் ஒரு காவல் உதவி ஆணையாளர், காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் கரங்கள் உதவி மையம் மூலம் பெறப்படும் வீடற்ற, ஆதரவற்ற நபர்களுக்கு உதவிட வேண்டி வரும் அழைப்புகளுக்கு காவல்துறையின் உரிய உதவி செய்திட காவல் கரங்கள் சேவை மையம் மூலம் மீட்டு உரிய மருத்துவ மற்றும் தங்கும் வசதி இருப்பிடங்கள் வசதிகளுள்ள அரசு மற்றும் தன்னார்வ தொண்டு அமைப்பு இல்லங்களில் தன்னார்வலர்களின் மூலம் தொடர்ச்சியாக உதவி செய்து ஆதரவற்ற நபர்களின் உறவினர்ளை கண்டறிந்து மீண்டும் குடும்பத்துடன் சேர்த்து வைக்கப்படுகிறது. ஆதரவற்றவர்களை மேற்குறிப்பிட்ட இல்லங்களில் சேர்த்து நல்ல முறையில் உதவி செய்து வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, 27.01.2025 அன்று காவல் கரங்கள் குழுவினருக்கு கிடைத்த தகவலின் பேரில், காவல் கரங்கள் உதவியுடன் மெய்யன்பு அறக்கட்டளை ஒருங்கிணைந்து காவல் கரங்கள் மீட்பு வாகனம் மூலம் கே-6 டி.பி.சத்திரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ஆதரவற்ற நிலையில் இருந்த சுமார் 80 வயது மூதாட்டியை மீட்டு உரிய நமூனா கடிதம் மூலம் முடிச்சூர் "கை கொடுப்போம்" காப்பகத்தில் சேர்த்து தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டது. விசாரணையில், மீட்கப்பட்ட மூதாட்டி, புளியந்தோப்பு பகுதியைச் சேர்ந்த அபூர்வம்மாள், வ/78, க/பெ.கந்தசாமி என்பதும், ஞாபக மறதி காரணமாக 26.01.2025 அன்று வீட்டிலிருந்து வெளியே சென்றவர் யார் என்பது தெரியாமல் டி.பி. சத்திரம் பகுதியில் ஆதரவற்ற நிலையில் இருந்ததும், மூதாட்டி அபூர்வம்மாள் காணாமல் போனது குறித்து அவரது குடும்பத்தினர் பி-4 பேசின் பாலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து பெண் காணவில்லை பிரிவில் வழக்குப் பதிவு செய்து, தேடப்பட்டு வருவதும் தெரியவந்தது.

அதன்பேரில், காவல் கரங்கள் குழுவினரால் அபூர்வம்மாள் மீட்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவது குறித்து பி-4 பேசின் பாலம் காவல் நிலையம் மற்றும் அபூர்வம்மாள் குடும்பத்தினருக்கு தகவல் கொடுக்கப் பட்டு, உரிய சட்ட நடவடிக்கைகளுக்கு பின்னர் அபூர்வம்மாள் 19.02.2024 அன்று அவரது குடும்பத்தினரிடம் பத்திரமாக ஒப்படைக்கப்பட்டார். அவர்தம் குடும்பத்தினர்

நெகிழ்ச்சியுடன் காவல்துறையின் காவல் கரங்கள், தன்னார்வலர்கள் மற்றும் உதவிய நபர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

இதுவரை காவல் கரங்கள் உதவி மையம் மூலம் 7,940 வீடற்ற, ஆதரவற்ற நிலையில் உள்ள மக்கள் மீட்கப்பட்டுள்ளனர். அவர்களில் 5,431 பேர் காப்பகங்களில் தங்க வைத்தும் 1,246 பேர் அவர்களது குடும்பத்துடன் சேர்த்து வைக்கப்பட்டும். 923 பேர் மனநலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டும்.

இதில் 341 நங்கள் பல்வேறு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றும் காவல் கரங்கள் மூலம் கண்காணிக்கபட்டு உரிய உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. வீடற்ற, ஆதரவுகளற்ற நபர்களின் உதவிக்கு காவல் கரங்களின் 9444717100 என்ற உதவி மைய எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# பாலியல் புகார் வந்ததும் விரைந்து நடவடிக்கை எடுக்கிறது காவல்துறை; நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை அதிகரித்துள்ளதாக பாராட்டிய உயர்நீதிமன்றம்! நிதிவிவகாரத்தில் தமிழ்நாடேகொந்தளிப்பில் இருப்பதை மடைமாற்றி பாஜகவை காப்பாற்றுகிறார் எடப்பாடி பழனிசாமி! - சட்டத்துறை அமைச்சர் ரகுபதி எக்ஸ்தளத்தில் பதிவு

சென்னை, 20 பிப்ரவரி 2025: பாலியல் புகார்களை வைத்து அரசின் மீது அவதூறு பரப்புவதே பழனிசாமிக்கு தொடர் கதையாகிவிட்டது. புகார் வந்ததும் விரைவாக விசாரித்து கைது நடவடிக்கை எடுக்கிறது காவல் துறை. ஆனால், பாதுகாப்பில்லை என சொல்லி பெண் குழந்தைகளை அச்சுறுத்துவதே பழனிசாமிக்கு வழக்கமாகிவிட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு பள்ளியில் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக புகார் எழுந்ததும் உதவி தலைமை ஆசிரியர் கைது செய்யப்பட்டு, சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், திமுக அரசை கண்டிக்கலாம். ஆனால், நடவடிக்கை எடுத்த பிறகும் பழனிசாமி அரசை விமர்சிப்பது தன்னை முன்நிறுத்தி கொள்ளும் அரசியலுக்குதானே?

பாதிக்கப்பட்ட மாணவிகள் அளித்த புகாரைத் தொடர்ந்து மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு குழுமத்தினர், சமூக நலத்துறை அதிகாரிகள் மற்றும் காவல்துறையினர் பள்ளிக்கு சென்று தனித்தனியாக விசாரணை நடத்தி புகாரை உறுதி செய்தனர். அதன் பிறகு உதவி தலைமை ஆசிரியர் மீது வழக்கு பதிவு செய்து காவல் துறை கைது நடவடிக்கை எடுத்துள்ளனர். முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிக்கு வந்ததில் இருந்து குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற நம்பிக்கை மாணவிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் வந்துள்ளது. அதனால்தான் மாணவிகள் துணிந்து புகார் அளிக் கிறார்கள்.

மும்மொழிக் கொள்கையை பாஜக புகுத்த முயற்சிக்கிறது; தமிழ்நாட்டிற்கு உரிய வரிப்பகிர்வு தருவதில்லை; ஒன்றிய பட்ஜெட்டிலும் தமிழக திட்டங்கள் இல்லை; கல்விக்கு நிதி இல்லை; இப்போது பேரிடர் நிவாரணமும் இல்லை என தொடர்ந்து மோடி அரசு தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது. இதையெல்லாம் மடைமாற்றி தன்னுடைய பாஜகவின் ராஜ விஸ்வாசத்தை காட்டுகிறார் பழனிசாமி. ஒன்றிய அரசுக்கு அவப்பெயர் வராமல் இருக்க பாலியல் வன்கொடுமை என்று சொல்லி மடைமாற்றும் அரசியல் யுக்தியை செய்கிறார் பழனிசாமி. ஒருசில குற்றச் சம்பவம் நடப்பதை வைத்து ஒட்டுமொத்தமாக பள்ளிக்கூடங்கள் பாதுகாப்பில்லை என மாணவிகளையும் பெற்றோரையும் பழனிசாமி அச்சுறுத்துவது கேவலமான மனநிலையை காட்டுகிறது.

அண்ணா பல்கலைக் கழக பாலியல் வழக்கு மற்றும் காவல் அதிகாரி மீதான பாலியல் வழக்கில் தமிழக அரசின் செயல்பாட்டை சென்னை உயர் நீதிமன்றம் நீதிபதிகள் கடந்த 17ம் தேதி பாராட்டினர். அத்துடன், மேலதிகாரிகள் மீது பாலியல் புகார் கொடுத்தால் நியாயம் கிடைக்கிறது என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் நீதிபதிகள் தெரிவித்திருக்கிறார்கள். நீதிமன்றத்திற்கு தெரிந்து உண்மை கூட எதிர்க் கட்சித் தலைவருக்கு தெரியவில்லை.

பாலியல் வன்கொடுமை என்பது ஒரு சமூகப் பிரச்சினை. மிருகங்கள் மனிதர் போர்வையில் உலவுவதால் அவை கண்களுக்கு எளிதாக தெரியாது.

அந்த மிருகம் குற்றம் செய்ததாக புகார் வந்ததும் உடனடியாக அரசும் காவல்துறையும் நடவடிக்கை எடுக்கிறது. பாலியல் குற்றவாளிகளை கைது செய்து தண்டனை பெற்றுத் தருகிறது திமுக அரசு என்பதை மறைத்து, அவதூறு அரசியல் செய்யும் அதிமுகவுக்கு தமிழ்நாட்டு மக்கள் படுதோல்வியையே தருவார்கள்.

# காசி தமிழ் சங்கமம்-3.0: தொழில் வல்லுநர்களும், தொழில் முனைவோரும் ஹனுமன் படித்துறையில் புனித நீராடினார்கள்

சென்னை, 20 பிப்ரவரி 2025: காசி தமிழ் சங்கமத்தின் மூன்றாவது ஆண்டு நிகழ்வில் பங்கேற்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில்முனைவோர் குழுவினர் ஹனுமன் படித்துறைக்கு வருகை தந்தனர். அவர்கள் கங்கையில் புனித நீராடி, பிரார்த்தனை செய்து, செழிப்புக்கான ஆசீர்வாதங்களை வேண்டினர். அதே நேரத்தில், அந்த இடத்தில் இருந்த ஆச்சாரியார்கள் ஆற்றின் பல்வேறு படித்துறைகளின் வரலாறு குறித்து விரிவாக எடுத்துரைத்தனர். பிரதமர் திரு நரேந்திர மோடியின் ஒரே பாரதம், உன்னத பாரதம் என்ற தொலைநோக்குப் பார்வையின் ஒரு பகுதியாக கல்வி அமைச்சகத்தால் காசி தமிழ் சங்கமம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கங்கையில் புனித நீராடிய பின், அவர்கள் படித்துறையை ஒட்டியுள்ள பழங்கால கோயில்களில் பிரார்த்தனை செய்தனர். இந்தக் கோயில்களின் வரலாறு, பிரம்மாண்டக் கட்டமைப்பு மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் பற்றிய விவரங்கள் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து ஹனுமன் படித்துறையில் உள்ள சுப்பிரமணிய பாரதியின் வீட்டிற்கு சென்ற தமிழக பிரதிநிதிகள், அங்கு அவரது குடும்பத்தினரை சந்தித்தனர். பார்வையாளர்கள் அவரது வாழ்க்கை மற்றும் பணிகளைப் பற்றி அறிய மிகுந்த ஆர்வம் காட்டினர். அவரது வீட்டிற்கு அருகிலுள்ள நூலகத்தையும் ஆய்வு செய்து சேகரிப்பு குறித்த தகவல்களையும் சேகரித்தனர்.

பின்னர், காஞ்சி மடத்திற்குச் சென்று அதன் வரலாற்றை அறிந்து கொண்டனர். குறிப்பாக காசியில் தென்னிந்திய பாணியில் கட்டப்பட்டுள்ள கோயிலை கண்டு இளைஞர்கள் உற்சாகமடைந்தனர். பண்டிட்



வெங்கட்ராமன் கணபதி, காசிக்கும் தமிழ்நாட்டிற்கும், இடையே உள்ள ஆழமான தொடர்பை விவரித்தார். இந்த ஒன்றுகூடல் இரண்டு வார நிகழ்வு அல்ல, பல நூற்றாண்டுகளைக் கடந்து செல்லும் உறவு என்று அவர் கூறினார். ஹனுமன் படித்துறை, கேதார் படித்துறை, ஹரிச்சந்திர படித்துறை ஆகியவை தென் மாநிலங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களின் இருப்பிடமாக உள்ளன என்றும், இது இரு பிராந்தியங்களுக்கும் இடையிலான நீடித்த தொடர்பை பிரதிபலிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். ஹனுமன் படித்துறையில் மட்டும் 150-க்கும் அதிகமான வீடுகள் தமிழ்க் குடும்பங்களுக்குச் சொந்தமானவை. அவர்கள் வாழும் வீதிகளில்தான் காசி தமிழ் சங்கமம் தினமும் நடைபெறுகிறது.

தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில்முனைவோர் குழுவின் சார்பாக பேசிய ராமன், காசி விஸ்வநாதர் கோயில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கண்டுள்ளது என்றார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் முன்முயற்சியைப் பாராட்டிய அவர், காசி, பிரயாக்ராஜ் மற்றும் அயோத்திக்கு பயணம் மேற்கொண்டது சிறந்த அனுபவமாக இருந்தது என்றும், வாரணாசிக்கு தாங்கள் மேற்கொண்ட பயணம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது என்றும் கூறினார்.